**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 42/2024</u>**

**2026 –ம் வருடம் பிப்ரவரி திங்கள் 07ம் நாள் சனிக்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. சிவராஜ் த/பெ. நாச்சிமுத்து வயது. 46 ஊர். அலியூர் ஹட்டி**

**-------------------------------------------------------------------------------**

**வாதி, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>PW1 குறுக்கு விசாரணை 11.30 A.M.</u>**

1. நான் இந்த வழக்கை S. நாச்சிமுத்து என்பவர் மேல் தாக்கல் செய்துள்ளேன். நாச்சிமுத்து என்பவர் என்னுடைய அப்பா ஆவார். இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் என்னுடைய குழந்தைகள் படிப்புக்காக வேண்டி நான் தற்போது வசித்து வரும் வீட்டை கட்டினேன். மேற்படி வீட்டில் இருந்து எனது அப்பா காலி செய்ய சொல்கிறார். என்னை முறைப்படி காலி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் குடியிருக்கும் வீடு யாரது பெயரில் கிரையம் செய்யப்பட்டுள்ளது, யார் பெயரில் வீட்டு வரி விதிக்கப்பட்டுள்ளது, யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்று சொன்னால் அப்பா பெயரில் உள்ளது. தாவா சொத்து வாங்குவதற்கு கடந்த 03.11.2016 ம் தேதி நானும் ராஜாமணியும் ஒப்பந்தம் செய்துகொண்டதன்பேரில் ரூ.50,000/– முன் தொகை கொடுத்தேன். கிரையத்தன்று நான் இல்லை என்பதால் எனது அப்பா

பெயரில் கிரையம் செய்யப்பட்டது.

2. என்னுடைய அப்பா குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் பெற்றோர் முதியோர் மற்றும் நல்வாழ்வு சட்டம் 2005 ன் கீழ் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் விசாரணைக்கு நான் சென்றேன். மேற்படி மனு மீது சார் ஆட்சியர் உத்தரவு அளித்திருந்தார். அந்த மனுவை நான் பெற்றேன். அந்த உத்தரவில் நான் குடியிருக்கும் வீடு எனது அப்பா பெயரில் இதுநாள் வரை இருக்கிறது என்பதால், நானும் எனது அப்பாவும் கூட்டுக்குடும்பமாக ஒரே வீட்டில் இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது என்று சொன்னால் அந்த உத்தரவில் என்னுடைய பெயர் இல்லை. சிவக்குமார் என்ற பெயர்தான் அந்த உத்தரவில் இருந்தது. என் தகப்பனாருக்கு சிவக்குமார் என்ற மகன் இல்லை என்றால் சரிதான். அந்த உத்தரவில் சிவராஜ் என்ற எனது பெயரை குறிப்பிடுவதற்கு பதிலாக சிவக்குமார் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்தரவின் பெறுநர் முகவரியில் எனது தந்தை பெயரும், எனது பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த உத்தரவை பெற்ற பின் சார் ஆட்சியரிடம் உத்தரவில் எனது பெயர் தவறாக உள்ளது என்று முறையீடு செய்தேனா என்றால் நான் மேல்முறையீடு செய்தேன். நான் இந்த வழ்க்கை தாக்கல் செய்யும்போது, சார் ஆட்சியரிடம் மனுவின் விசாரணை நிலுவையில் இருந்தது.

3. மேல்முறையீடு குறித்த எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த மேல்முறையீடும்

செய்திருந்தால், என் அப்பாவிற்கு அறிவிப்பு அனுப்பி இருப்பார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சார் ஆட்சியர் பிறப்பித்த உத்தரவின் மேல் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்பதால் தான் எந்த ஒரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.த.சா.ஆ.9 கிரைய பத்திரத்தில் தாவா சொத்திற்கு நான் முன்பணம் செலுத்தியதாகவோ, கிரைய தொகையை என் வருமானத்தின்மூலம் தான் செலுத்தினேன் என்று எந்த வாசகமும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

**Sd/- G. Amirdham, 07.02.2026**
**District Munsif,**
**Kotagiri.**